**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**

அமர்வு வழக்கு எண்.393 /2018

**அ. சா– 8**

| | |
|---|---|
| பெயர்: திரு.ஸ்ரீராமச்சந்திரன் | கிராமம் : |
| த/பெ : திரு.பி.குமரப்பன் | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.MohanaSundari Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 11th day of October–2022.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் பொருளாதார குற்றப்பிரிவில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன்., கடந்த 28–7–2016 ம் தேதி நான் சேலம் மாநகரம் கிச்சிப்பாளையம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த போது அ.சா.6 திரு. ரவி காவல் ஆய்வாளரிடமிருந்து இந்த வழக்கு கோப்பை பெற்று, பார்வையிட்டு எதிரிகள் மீது கடந்த 20–09–2016 ம் தேதி பிரிவு 3 (1) தமிழ்நாடு பொது சொத்துக்கள் சேதப்படுத்துதல் (தடுப்புச்சட்டம்) 1992 ன் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து சேலம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2 ல் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில்)**

நான் இந்த வழக்கில் சாட்சிகளை விசாரித்தேன். சாட்சிகள். அ.சா.6 திரு. ரவி ஆய்வாளரிடம் கூறிய விபரங்களை என்னிடம் சொன்னதால் தனியாக நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் சரிவர ஆவணங்களை பரிசீலிக்காமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேள் என்றால் சரியல்ல.

மறு முதல் விசாரணை – இல்லை.

Sd/– SreeRamachandran

Sd/– Tr.S.Jeganathan
III ADJ (FAC) Salem.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**
**அமர்வு வழக்கு எண்.355 /2010**

**அ. சா.21**

| | |
|---|---|
| பெயர்: திரு.அசோகன் | கிராமம் : |
| த/பெ : திரு. | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.MohanaSundari Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 11th day of October–2022.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் அன்னதானப்பட்டி சரக உதவி ஆணையராக பணிபுரிகிறேன். கடந்த 20–07–2009 ம் தேதி நான் அன்னதானப்பட்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது செவ்வாய்ப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பை கூடுதலாக கவனித்தேன். அன்றைய தினம் இந்த வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 5–30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடங்கள் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடங்கள் முறையே **–அ.சா.ஆ.–20, 21, 22**. பின்பு சம்பவ இடத்தில் கிடந்த 2 உருட்டுக்கட்டைகளை சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.07.2009 ம் தேதி காலை 11 மணிக்கு திருச்சி பிரதான சாலை ராஜசபரி திரையரங்கிற்கு முன்னால் 1, 2 எதிரிகளை ( பிரேம்நாத், நந்தகுமார்) கைது செய்து விசாரித்த பொழுது எதிரிகள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவுசெய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 வது எதிரி பிரேம்நாத் எடுத்து ஆஜர்செய்த TN 30 F 1716 என்ற பதிவு எண் கொண்ட கருப்பு நிற இருசக்கர வாகனத்தை மகஜரில் கைப்பற்றினேன். 2 வது எதிரி லாலா (எ) நந்தகுமார் எடுத்து ஆஜர்செய்த TN 30 AC 4222 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர

வாகனத்தை மகஜரில் கைப்பற்றினேன். TN 30 F 1716 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் – **சா.பொ.–4**. TN 30 AC 4222 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் – **சா.பொ.–5.** ( தற்பொழுது மேற்படி இருசக்கர வாகனத்தை திருமதி. மோகனசுந்தரி, Translator மூலம் பார்வையிட்டதில் நம்பர் பிளேட் இல்லை. வாகனத்தில் இந்த வழக்கு குற்ற எண் இடம்பெற்றுள்ளது.) மேற்படி சான்று பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். TN 30 F 1716 –க்குரிய படிவம் 91– **அ.சா.ஆ.–23**. TN 30 AC 4222–க்குரிய படிவம் 91– **அ.சா.ஆ.–24**. பின்பு எதிரிகள் மற்றும் சொத்துக்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு மேற்படி செவ்வாய்பேட்டை காவல்நிலைய ஆய்வாளர் திரு.சேகர் விடுமுறை முடிந்து பணிக்கு திரும்பியதால் அவரிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

**குறுக்குவிசாரணை ( 2 முதல் 7 எதிரிகள் தரப்பில் )**:–

புகார் (அ.சா.ஆ.–1 ல்) உள்ள கையெழுத்துக்கள் சார்பாய்வாளர் கிருஷ்ணமூர்த்தியின் கையெழுத்தை ஒத்து அமைந்துள்ளன என்றால் சரியல்ல. புகாரில் அடையாளம் தெரியாத 5 நபர்கள் என்று உள்ளது என்றால் சரிதான். அ.சா.–1 ன் வாக்குமூலத்தில் 5 நபர்களுக்கு பதில் 6 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2 வது எதிரியை தகவலாளி அடையாளம் காட்ட கைதுசெய்தேன். புகாரில் இருசக்கர வாகனங்களின் எண்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் பெற்றோரை நான் விசாரித்தேன். அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு ஹோட்டல் முன்புறம் உள்ள கடைகளில் உள்ளவர்களை நான் சாட்சியாக விசாரித்தேன். அவர்கள் வாக்குமூலம் கொடுக்க முன்வரவில்லை. அஸ்தம்பட்டி மற்றும் அழகாபுரம் காவல்நிலைய சரகத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக நான் விசாரிக்கவில்லை.

(1 வது எதிரி தரப்பில் வழக்குரைஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை இல்லை. )

**மறுமுதல்விசாரணை – இல்லை.**

Sd/– Ashokan

Sd/– Tr.S.Jeganathan
III ADJ (FAC) Salem.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**
**அமர்வு வழக்கு எண்.355 /2010**

**அ. சா.**

| | |
|---|---|
| பெயர்: திரு. | கிராமம் : |
| த/பெ : திரு. | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.MohanaSundari Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 11th day of October–2022.

**முதல் விசாரணை:–**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**

அசல் வழக்கு எண். /20

திரு. **S**. ஜெகநாதன், **B**.**A**, **B**.**L**., **D**.**C**.**A**.**C**.**J**., முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு ) அவர்கள்

**Deposition of PW**- **solemnly affirmed in accordance with the provisions of Evidence Act**, **X of** 1972, **this the** 11$^{th}$ **day of October**, 2022.

| | |
|---|---|
| பெயர் : திரு. | கிராமம் : |
| த/பெ. : திரு. | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

முதல்விசாரணை:-